**சிவகாசி நகர்மன்றம்**
**அவசரக் கூட்டம்**

**நகராட்சி அலுவலகம்.**

**அவசரக்கூட்டம் எண் .** **நாள் : 12 .08 .2020.**

நிகழும் திருவள்ளுவராண்டு 2049 விகாரி வருடம் ஆடி திங்கள் 28ஆம் நாள் 2020ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12 ம் தேதி புதன் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்ற நகர்மன்ற அவசரக்கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை : திரு. ப.கிருஷ்ணமூர்த்தி எம்.ஏ.,எம்பில்.,**
**தனி அலுவலர்.**

**பொருள் :**

1. சிவகாசி நகராட்சி பொறியியல் பிரிவு வாகனம் TN67X3964 சுவராஜ் மஸ்தாவிற்க்கு மறுதகுதி சான்று பெருவதற்க்கு பழுதுகளை சரிசெய்யும் பணிக்கு 10.08.2020-ம் தேதியில் தொகை ரூ.70,800க்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1. | நாகேந்திரன் ஆட்டோ மொபைல்ஸ் | ரூ.310 மதிப்பீட்டு தொகையை விட குறைவு |
| 2. | வெங்கடேஷ் ஆட்டோ மொபைல்ஸ் | ரூ.3050 மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலகக் குறிப்பு: வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி தந்துள்ள நாகேந்திரன் ஆட்டோ மொபைல்ஸ் என்பவர் மதிப்பீட்டினைவிட ரூ.310 குறைவாக தந்துள்ள ஒப்பந்தபுள்ளியினை ஏற்று குடிநீர் நிதியில் வேலை செய்ய வேலை உத்திரவு வழங்க மன்றம் முடிவுசெய்யலாம்.

ந.க.எண்:3175/2020/இ2

அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண். 991

2. சிவகாசி நகராட்சி பொறியியல் பிரிவு வாகனம் TN67W5156 குடிநீர் வாகன லாரிக்கு மறுதகுதி சான்று பெருவதற்க்கு பழுதுகளை சரிசெய்யும் பணிக்கு 10.08.2020-ம் தேதியில் தொகை ரூ.78,450க்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1. | நாகேந்திரன் ஆட்டோ மொபைல்ஸ் | ரூ.130 மதிப்பீட்டு தொகையை விட குறைவு |
| 2. | வெங்கடேஷ் ஆட்டோ மொபைல்ஸ் | ரூ.3550 மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலகக் குறிப்பு: வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி தந்துள்ள நாகேந்திரன் ஆட்டோ மொபைல்ஸ் என்பவர் மதிப்பீட்டினைவிட ரூ.130 குறைவாக தந்துள்ள ஒப்பந்தபுள்ளியினை ஏற்று குடிநீர் நிதியில் வேலை செய்ய வேலை உத்திரவு வழங்க மன்றம் முடிவுசெய்யலாம்.

ந.க.எண்:3176/2020/இ2

அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண். 992

3. சிவகாசி நகராட்சி வெம்பக்கோட்டை தலைமை நீரேற்று நிலையத்தில் வடிகிணறுகள் மற்றும் அணையின் உட்ப்பகுதியில் உள்ள உறைகிணறுகளிலிருந்து தண்ணீர் எடுக்கப்பட்டு 50HP சிலிப்ரிங் மோட்டார் பம்ப்செட் மூலம் சிவகாசிக்கு நீரேற்றம் செய்யப்பட்டுவருகிறது. இரண்டு 50HP மின்மோட்டார்கள் பகல் மற்றும் இரவு என சுழற்சி முறையில் தொடர்ந்து இயக்கப்பட்டு வருகிறது. அவ்வாறு இயங்கி வந்த 50HP மின்மோட்டார் unit-2 சில தினங்களுக்கு முன்பு பெய்த மழையின் போது ஏற்ப்பட்ட இடி,மின்னல் காரணமாக மோட்டாரில் உள்ள காயில் பழுதாகி தற்போது இயக்க முடியாத நிலையில் உள்ளது.எனவே 50HP மின்மோட்டாரை பழுது நீக்கம் செய்யும் பணிக்கு ஆகும் உத்தேசசெலவு ரூ.44,800/க்கு (ரூபாய் நாற்ப்பத்தி நான்காயிரத்து எண்ணூாறு மட்டும்) மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : - 1.மன்றம் அனுமதி வழங்கலாம்.
2.மேற்காணும் பணிக்கு குடிநீர் நிதியில் செலவு செய்யவும் மன்ற

அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண். 3312/2020/இ2.

அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண். 993

4. சிவகாசி நகராட்சி காமராஜர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தில் அமைந்துள்ள நீர் உந்தும் நிலையத்திலிருந்து 3.00 X 3.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு (கார்நேசன் காலனி,ஆட்டுச்சந்தை, MGRதிடல்) நீரேற்றம் செய்ய கூடிய 20HP ABB Induction Motor With CentriFugal Pump-ன் மூலம் நீரேற்றும் செய்து குடிநீர் வினியோகம் நன்றாக செய்யப்பட்டு வருகிறது.தற்போது UNIT NO-1-ல் ABB Induction Motor—லும், Centrifugal Pump Bearing-கள் தேய்ந்து அதிக சத்ததுடன் இயங்கிவருகிறது. எனவே அதனை பழுது நீக்கம் செய்யும் கணிக்கு ஆகும் உத்தேசசெலவு ரூ.38200/க்கு (ரூபாய் முப்பத்தி எட்டாயிரத்து இருணூாறு மட்டும்) மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : - 1.மன்றம் அனுமதி வழங்கலாம்.
2.மேற்காணும் பணிக்கு குடிநீர் நிதியில் செலவு செய்யவும்

மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண். 3202/2020/இ2.

அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண். 994

5. இந்நகராட்சியில் பணிபுரியும் அம்மா உணவக பணியாளர்கள் மற்றும் பொது சுகாதாரப்பிரிவு டெங்கு பணியாளர்கள் அவர்களிடமிருந்து ஏப்ரல்-2020 முதல் மார்ச்-2021 வரை மாத ஊதியத்தில் பொது வருங்கால வைப்பு நிதி (EPF) பிடித்தம் செய்யப்பட்ட தொகையை அவரவர் கணக்கில் ஆன்லைனில் திரு.என்.சிவேஷ் பிரபு (EPF கன்சல்டன்ஸி ) என்பவர் வரவு வைக்க அனுமதியும், அன்னாருக்கு உத்தேச கன்சல்டன்ஸி செலவு தொகை ரூ.15000/- (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும் ) பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.4692/2016/அ1

அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண். 995

தனி அலுவலர்
சிவகாசி நகராட்சி